Since 2009

# Little Aid Newsletter

VOLUME 02, ISSUE 01 OCTOBER 2020

**ERDICATE INEQULITY BY EDUCATION!**

- Information is knowledge
- Knowledge is wealth
- Knowledge is power
- Only knowledge grows when you share

**INSIDE THIS ISSUE:**

ஒளிவிழா. 2019

தைப்பொங்கல் 2020

லிட்டில் எய்ட் நிறுவனத்தின் கம்பனிப் பதிவு

கோவிட் 19க்கு பின்னரான கற்றல்

2020 ஆம்ஆண்டு தொகுதி 1 இற்கான இறுதிப் பரீட்சை.

சமூகப்பணிகளில் எமது மாணவர்கள்

தையல் வகுப்புகள்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றலுக்கான

சிறுவர் இல்ல மாணவர்களுக்கு உடை, பாதணிகள் வழங்கல்

## கோவிட்-19ற்கு பின்னரான கணினி வன்பொருள் கற்கையில் ஆர்வத்துடன்



லிட்டில் எய்ட் நிறுவனத்தின் கணினி வன்பொருள் வகுப்புகளுக்கு சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர்கள் 21 பேர் இம்முறை இப்பயிற்சியை நிறைவு செய்துள்ள நிலையில் தற்பொழுது சிறார்களும் இக்கற்கை நெறியில் இணைந்துள்ளனர்.

## கற்றல் கடந்த மனித நேயம்

2018ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை சேகரிப்பதிலும் வழங்குவதிலும் லிட்டில் எய்ட் திறன்விருத்தி மைய மாணவர்கள் ஈடுபட்டனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 29மாணவ மாணவிகளை கற்சிலைமடு பிரதேசத்தில் திரு. க. தர்சன் அவர்கள் பராமரித்து வருகின்றார். இதன்போது அவர்களுக்குரிய உலர் உணவு, கற்றல் உபகரணங்களை எமது மாணவர்களும் ஆசிரியர்களும் நேரில் சென்று வழங்கினர் . இதற்கு உறுதுணையாகவும் அனுசரணையாகவும் பராசக்தி ஆன்மீக கல்வி வளர்ச்சி மன்றமும் புலம்பெயர் உறவுகளும் கிளிநொச்சி மக்களும் கைகோர்த்திருந்தனர்.







கடந்த வருடத்தை போன்று 2019 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக தமது இருப்பிடங்களை இழந்து ஏதிலிகளாக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் லிட்டில் எய்ட் திறன்விருத்தி மையத்தின் மாணவர்கள் தாமே முன்வந்து அவர்களுக்குரிய உலர் உணவுப் பொருட்களுக்குரிய பணத்தை சேகரித்தனர். இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களுக்கான பணத்தை எமது நிறுவனத்தை சூழவுள்ள மக்களிடமே பெற்று அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக பச்சிலைப்பள்ளிபிரதேச கச்சார்வெளி,தம்பகாமம் ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த நிவாரணம் பெறாத மக்களுக்கும் ,கரைச்சி பிரதேச இரத்தினபுரத்தைச் சேர்ந்த 3 குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. இப்பொருட்களை விநியோகிப்பதற்கான வாகனத்துடன் சாரதி திரு. சிவா அவர்களையும் மகாதேவா ஆச்சிரமம் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதை ஏற்பாடு செய்த மகா தேவா ஆச்சிரம முன்னாள் தலைவர் திரு பொன் நித்தியானந்தன் அவர்களை இக் கணம் நன்றி கூறுகின்றோம். இதில் பளை உதவி பிரதேச செயலாளரும் பணியாளர்களும் எம்முடன் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கல் - 2020



லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தின் தைப்பொங்கல் விழா தொடர்ந்து 2018 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் முறையாக . எமது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் பொங்கல், பாரம்பரிய விளையாட்டுக்களுடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இவ் வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று லிட்டில் எய்ட் வளாகத்தில் பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. .இதில் மாணவர்களினால் பொங்கல் பொங்குவதற்குரிய இடம் ஒழுங்குபடுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டது. முன்னாள் மாணவன் துலக்சிகனின் தலைமையில் இப்பொங்கல்விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் எமது நிறுவன நம்பிக்கை நிதிய உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், என பலரும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது பொங்கல் பொங்கி முடிந்த பின்னர் மாணவர்களுக்கு அப்பொங்கல் பகிர்ந்தளிக்கப்பட்ட பின் கிளித்தட்டு, தாச்சி, யானைக்கு கண்வைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் விளையாட்டுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.



# ஒளி விழா



லிட்டில்எய்ட் திறன் விருத்தி மையத்தின் 2019 ஆண்டு 2ம் தொகுதி மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒளி விழா டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்கான மேடை வடிவமைப்பு, விழா ஒழுங்குகள் என்பன முற்றுமுழுதாக மாணவர்களாலேயே செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுக்கு வண.யோசுவா அடிகளார் அவர்கள் வருகை தந்து ஆசியுரையுடன் சிறப்புரையும் நிகழ்த்தியிருந்தார். இந்நிகழ்வுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களும் கலந்துகொண்டிருந்தார். இந்நிகழ்வில் மாணவர்களின் கறோல் கீதங்கள்,நடனம், பாடல்கள் என்பனவற்றுடன் மாணவர்களை ஆச்சரியமூட்டும் வகையில் நத்தார்பாப்பா வருகை தந்து மாணவர்களுடன் ஆடிப்பாடியதுடன் மாணவர்களுக்கு இனிப்புகளை வழங்கியிருந்தமை குறிப்பிடப்பிடத்தக்கது.

# வாணி விழா








லிட்டில் எய்ட் திறன்விருத்தி மையத்தின் மாணவர்களின் முயற்சியில் 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி தொடங்கி ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி வரை நாட்களும் நவாராத்திரிக்கான பூசைகள் நடைபெற்று பத்தாம் நாளான விஜய தசமி அன்று(08.10.2019) வாணி விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இதில் மாணவர்களின் பாடல் நிகழ்வு, பட்டி மன்றம், கவிதா நிகழ்வு , நடனம் போன்றவற்றுடன் கிளிநொச்சி மாவட்ட சின்மயா மிசன் சுவாமி சிவேந்திர சைத்தன்யா அவர்களின் சொற்பொழிவும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளுக்குரிய செலவுகள் உட்பட அனைத்து மேடை வடிவமைப்பு, விழா ஒழுங்குகள் என்பன முற்று முழுதாக மாணவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






## CHIDREN’S DAY & TEACHER’S DAY

லிட்டில் எய்ட் திறன்விருத்தி மையத்தில் முதன்முறையாக சிறுவர்,ஆசிரியர் தினங்கள் மாணவர்களால் கொண்டாடப்பட்டன. சிறுவர் தினத்தன்று சிறுவர்களின் கலைநிகழ்வுகள் விளையாட்டுகள் நடைபெற்றன மாணவர்கள் மகிழ்வுடன் சிறுவர் தினத்தை கொண்டாடி மகிழ்ந்தனர் . ஆசியர் தினத்தின் போது லிட்டில் எய்ட் திறன்விருத்தி மையத்தில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மாலைகள் அணிவித்து மாணவர்களால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கவிதா நிகழ்வு,கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.


FORM 2D

Democratic Socialist Republic of Sri Lanka

No.of the Company | G | L | 00220654

The Companies Act No 7 of 2007

Certificate of Incorporation of a Company limited by Guarantee

Pursuant to Section 5 read with Sec. 34

லிட்டில் எய்ட் ஸ்கில் டிவெலொப்மெண்ட் செண்டர் (கரண்டி) லிமிட்டட்

I hereby certify that

LITTLE AID SKILL DEVELOPMENT CENTRE (GUARANTEE) LIMITED

On this day incorporated as a Company limited by guarantee having complied with the requirements under the Companies Act, No 7 of 2007. And that the Company is Limited By Guarantee.
Given under my hand at Colombo, on this Twenty Fifth day of February two Thousand Twenty

D.N.R SIRIWARDENA
Registrar General of Companies

# லிட்டில் எய்ட் நிறுவனத்தின் கம்பனிப் பதிவு

*கடந்த 10 வருடங்களாக பதிவு செய்யாத நிலையில் 2019ஆம் ஆண்டு லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையம் என்ற பெயரின் கீழ் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இதன் இலங்கை நம்பிக்கை நிதிய பொறுப்பாளர்களாக பின்வருவோர் உள்ளனர்.*

| | |
|---|---|
| **நிறைவேற்றுப் பணிப்பாளர்** | திரு.வ.சிவஜோதி |
| **தலைவர்** | திரு.சி.இதயராசா |
| **உபதலைவர்** | திரு.ச.தவதாஸ் |
| **செயலாளர்** | திரு.ப.தயாளன் |
| **பொருளாளர்** | திரு.மா.குகன் |
| **உதவிச்செயலாளர்** | செல்வி க.அரிமர்த்தனா |
| **குழு உறுப்பினர்கள்** | திருமதி மோ.அருள்சோதி<br>திரு.ந.ஜயசுந்தர<br>திரு.சே.சுதாகரன்<br>திருமதி.சி.ஹம்சகௌரி<br>திரு.க.தர்சன் |





## கறையானிடமிருந்து பாதுகாப்பு

**எ**மது நிறுவனத்தில் கறையானின் தாக்கம் அதிகமாக இருந்ததால் அதிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் யாழிலிருந்து நிறுவனம் எமது நிறுவன கட்டடத்தை பரிசோதனை செய்து உத்தேச செலவீனத்தை தந்திருந்தார்கள். கோவிட்-19 நோய்த் தாக்கத்திற்குப்பின்னர் வகுப்புகள் தொடங்காத காரணத்தை சாதமாகக்கொண்டு கறையானுக்கு மருந்து அடிக்கப்பட்டது. இதன்போது எமது மாணவர்கள் வகுப்பறைகளை ஒழுங்குபடுத்தியிருந்ததுடன் கறையான மருந்து அடிக்கும் நேரத்தில் நிறுவனத்தினருக்கு உதவிகளும் புரிந்தனர்.



## 2020 ஆம்ஆண்டு தொகுதி 1 இற்கான இறுதிப் பரீட்சை

**லி**ட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான முதலாம் தொகுதி மாணவர்களின் கணினி இறுதிப்பரீட்சை கொரோனா நோய் தாக்கம் காரணமாக பிற்போடப்பட்டிருந்தது. இப்பரீட்சையானது இந்நோயின் தாக்கம் கட்டுக்குள் வந்த பின்னர் கடந்த ஜுன் மாதம் 20 திகதி நடைபெற்றது . ஆரம்பத்தில் இவ்வகுப்பில் 100 பேர் இணைந்திருந்தனர் இறுதிப் பரீட்சையின் போது 95 பேர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கான பரீட்சை பிரதான மண்டபத்திலும் ஏனைய அறைகளிலும் இடம்பெற்றது.

இதேபோல கணினி வன்பொருள் மாணவர்களுக்கான இறுதி செயன்முறைப்பரீட்சையும் எழுத்துப்பரீட்சையும் இடம்பெற்றது. இம்முறை கணினி வன்பொருள் பரீட்சைக்கு 20 மாணவர்களுக்கு மேல் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## கோவிட்-19 ற்கு பின்னரான கற்றல் நடவடிக்கைக்கு ஆயத்தமாகுதல்

*கோவிட்19 தாக்கத்தின் பின்னர் எமது நிறுவனமும் 3 மாதகாலம் கற்றல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருந்தது. மீண்டும் நிலமை கட்டுக்குள் வந்து கறையானுக்குரிய மருந்து அடிக்கப்பட்ட பின்னர் எமது நிறுவன வளாகத்தையும் கற்பித்தல் அறைகளையும் மீள ஒழுங்கமைக்கவும் துப்பரவாக்கவும் வேண்டியிருந்தது.இவ் பணிகள் அனைத்தும் எமது 2020 1ம் தொகுதி மாணவர்களால் மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்டன.*





## சிறுவர் இல்ல மாணவர்களுக்கு உடை, பாதணிகள் வழங்கல்

எமது நிறுவனத்தின் நம்பிக்கை நிதிய உறுப்பினரான திரு க.தர்சன் அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 29 மாணவ, மாணவிகளை கற்சிலைமடு பிரதேசத்தில் பராமரித்து வருகின்றார். அவர்களுக்காக இலண்டனிலிருந்து எமது புலம்பெயர் உறவுகளால் உடைகள், பாதணிகள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன அவற்றை எமது நிறுவனத்தின் நம்பிக்கை நிதிய உறுப்பினர்களுடனும் மாணவர்களுடனும் நேரில் சென்று வழங்கிய போது.







# சமூகப்பணிகளில் எமது மாணவர்கள்



**கோவிட்-19** நோய்த் தாக்கத்திற்குப்பின்னர் கிளிநொச்சி புனித பாத்திமா (றோ.க.) பாடசாலையில் பழுதடைந்த நிலையில் இருந்த எட்டுக் கணினிகள் இலவசமாக எமது லிட்டில் எய்ட் திறன்விருத்தி மைய கணினி வன்பொருள் கற்கைநெறி மாணவர்களால் திருத்திக் கொடுக்கப்பட்டது.

## தையல் வகுப்புகள்



**கோவிட்-19** தாக்கத்தின் பின்னர் தையல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் மிகுந்த விருப்போடு தையல் கற்கைகளை மேற்கொண்டுவருவதுடன் முகக்கவசம், அணிகலன்கள் பண்டிகைச்சட்டைகள், குழந்தைகளுக்கான சட்டைகளை உருவாக்குவதில் அக்கறை காட்டி வருகின்றனர்.









## சிறார்களின் மீன்வளர்ப்பு

**லிட்டில் எய்ட்டில்** கணினிக் கற்கையினை மேற்கொள்ளும் சிறார்கள் தமது பொழுது போக்கிற்காகவும் அழகுக்காகவும் மீன் வளர்ப்பதற்காக தாமே ஏனைய மாணவர்களிடம் பணம் சேகரித்து மீன் தொட்டியுடனான மீன்களை வளர்த்து வருகின்றனர்...





## லிட்டில் எய்ட்டில் மாணவர்களின் சேவைகள்



**லிட்டில் எய்ட்** நிறுவனத்தில் துப்பரவாக்கல் பணி, மேலதிக நீர் குழாய் வசதிகள், மரங்கள் வெட்டுதல் , கிணறு துப்பரவாக்குதல் போன்ற இன்னோரன்ன வேலைகள் அனைத்தும் ஒவ்வொரு காலத்துக்கும் உரிய எமது மாணவர்களாலேயே செய்யப்பட்டு வருகின்றமை மாணவர்கள் நிறுவனம் சார்ந்து தமது பொறுப்புடன் செயலாற்றி வருகின்றதைக்காட்டுகின்றது.

## 2019 ஆம் ஆண்டு தொகுதி 2 இற்கான இறுதி PowerPoint Presentation



**லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்தின்** கணினி பாடநெறியில் Application பாடத்தை நிறைவு செய்த 2019ஆம் ஆண்டு இரண்டாவது தொகுதி மாணவர்களின் PowerPoints Presentation நிகழ்வு 2019 November 26 அன்று பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது . இந்த PowerPoint Presentation செய்வதற்காக மாணவர்களை குழுவாக பிரித்து அவர்களுக்குரிய தலைப்பு வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு இடையிலான குழு செயற்றிட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் குழுவாக பிரித்து விடப்பட்டனர். ஒவ்வொரு குழுவும் வெவ்வேறான தலைப்புக்களை தங்களின் PowerPoint Presentationக்கு எடுத்து அது தொடர்பான தேடல்களை மேற்கொண்டு PowerPoint Presentation ஐ வழங்கினார்கள்.

இதேபோல இத்தொகுதி கணினி வன்பொருள் மாணவர்களுக்கான இறுதி செயன்முறைப்பரீட்சையும் எழுத்துப்பரீட்சையும் இடம்பெற்றது.





## ஒதியமலை நெற் செய்கைக்கான நிதி உதவி

எமது நிறுவனத்தின் நம்பிக்கை நிதிய உறுப்பினரான திரு க.தர்சன் அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 29மாணவ மாணவிகளை கற்சிலைமடு பிரதேசத்தில் பராமரித்து வருகின்றார். அவர்களின் உணவு உடை உறையுள் தேவைகளுடன் கற்றல் நடவடிக்கைகளையும் அவர் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் வெகு சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார். அவர்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்கான நிதியை தங்குதடையில்லாமல் பெறுவதற்காக ஒதியமலையில் 30 ஏக்கர்காணியை 20 வருட குத்தகைக்காக பெற்றுள்ளார். அக்காணியில் வளர்ந்துள்ள பெரு மரங்களை அகற்றித் துப்பரவாக்கி அதில் நெற்செய்கையை மேற்கொள்வதற்காக எமது நிறுவனத்திடம் வட்டியில்லாக் கடன் அடிப்படையில் மீண்டும் மீளளிப்புச்செய்வதாக 10 இலட்சம் ரூபாய்களைக் கோரியிருந்தார். அந்தவகையில் நாம் அவருக்கு அந்தப்பணத்தை நிதி அனுசரணையாளர்களினூடாக கொடுத்து உதவியுள்ளோம்.



### தையல் வகுப்புகளை நிறைவு செய்தவர்களுக்கான இறுதிப் பரீட்சை

எமது கற்கை நிலையத்தில் தையல் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களை தேசியபயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையில் நாம் பதிவு செய்திருந்தோம் .அவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களுக்கான NVQ level 3 பரீட்சை இடம்பெற்றபோது






### மாணவர்களுடன் கல்விச் சுற்றுலா

எமது கற்கை நிலையத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுடன் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் ரிக்கோ ஹோட்டலில் International Tech Summit என்னும் மகுட வாசகத்தில் நடைபெற்ற கணினிக் கண்காட்சியில் எமது மாணவர்கள் பங்குபற்றிய போது.

## Little Aid Skill Development Centre


Kanagarasa Road, Thirunagar
Kilinochchi
Phone: 021-2283980
0777-378556
Email:
littleaidsrilanka@gmail.com


Account Name:
Little Aid Skill Development Centre(Gurantee)Ltd
Account number :146010005876
Bank HNB
**Bank Code** :7083
**Swift Code**: **HBLILKLX001**
**Branch Code: 146**
Branch Kilinochchi South

### How can I get involved?

- You can donate as little as £5 per month to become a member.
- You can take part in our fund raising and other activities.
- When you visit our homeland, you can visit our centre directly and get involved with them.
- We welcome new resources - people can come visit our centre to share their experience (Please make prior arrangements).

### Bank Details to Set Up Regular Standing Order

Account Name: Little Aid Bank: HSBC

Branch: 16 Shephards Bush Green, London, W12 8PT

Account No: 91441515

Sort Code: 40 03 29

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றலுக்கான ஊக்குவிப்பு

**இறுதி யுத்தத்தால்** பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக அவர்கள் ஆரம்பம் கல்வி முதல் பல்கலைக்கழகம் செல்லும் வரை அவர்களுக்குரிய மாதாந்த கல்விச் செலவை ஈடு செய்யும் வகையில் அனுசரணையாளர்கள் ஊடாக லிட்டில் எய்ட் திறன்விருத்தி மையம் உதவிபுரிந்து வருகிறது. அந்தவகையில் இரண்டு மாணவிகளுக்கும் ஒரு மாணவனுக்கும் அவர்களின் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்கல்வியை பூர்த்தி செய்து பல்கலைக்கழகம் புகும்வரை மாதாந்தம் மூவாயிரம் (3000/=) ரூபாவை வழங்கி வருகின்றனர். இந்த செயற்றிட்டத்தின் அனுசரணையாளராக கனடாவில் இருந்து திரு.ஆதவன் அவர்களும் அவரது நண்பர்களும் எம்முடன் கைக்கோர்த்துள்ளார்கள். இதேபோன்று கனடாவைச் சேர்ந்த திரு.சுவேந்திரன் அவர்கள் மாங்குளத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு மாதாந்தம் ஐயாயிரம் (5.000/=) ரூபாவை கல்விச் செயற்பாட்டுக்காக அனுசரணை வழங்கி வருகிறார்.

## Little Aid Skill Development Centre
## லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையம்

Gurantee (Ltd) Reg No: GL 00220654

**Sponsorship Partner:**
**Ealing Kanaga Thurkkai Amman Temple (London)**

**Computing-Tailoring-English**
**Interpersonal Skills Development** Free

**கணினி – தையல் பயிற்சி – ஆங்கிலம்**
**திறன் விருத்தி கற்கைகள்** இலவசம்

021 - 2283980, 0777 - 378556.
littleaidsrilanka@gmail.com

**Kanagarasa Road, Thirunagar, Kilinochchi.**

LITTLE AID UK Charity No:-1129695

## லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையத்திற்கான அனுசரணையாளர்கள்

*எமது லிட்டில் எய்ட் திறன் விருத்தி மையம் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலண்டன்'ஈலிங் கனக துர்க்கை அம்மன் கோயில்'*

*'அகிலன் அறக்கட்டளை' 'நவமங்கை நிவாசம்' 'சிந்தனை வட்டம்'*

*'திங்க் ഉ வைஸ்'*, *'தேசம்'* "Book of Land" **போன்ற பல தொண்டு நிறுவனங்கள் எமக்கு அனுசரணையாளர்களாக இருந்துள்ளார்கள் அந்த வகையில் 2019 இன்**

**பிற்பகுதியிலிருந்து "***ஈலிங்* **கனக துர்க்கை** *அம்மன் கோயில்'* **புதிய நிர்வாகத்தினர் மீண்டும் எமக்கு 2020 இலிருந்து எமது கணினிக்கற்கை நெறிகளுக்கும் கற்சிலை மடு சிறுவர் இல்ல மாணவ மாணவிகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்கி வருகின்றனர்**